அரசாங்க நிருவாக சுற்றிக்கை இலக்கம்: 09/98.

எனது இலக்கம் : IV/2/9/156/6/39 (H)
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு—07
1998 ஏப்பிரல் 28 ஆந் தேதி.

செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்,

## ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வேதன ஏற்றங்களும்

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் IV ஆம் அத்தியாயத்தின் 18(1) (2) (3) (4) மற்றும் 25 ஆம் பிரிவுகளின் பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. **அறிமுகம் :-**

அரசியலமைப்புச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் படி சிங்கள மொழி அரசகரும மொழியாவதுடன் தமிழ் மொழி அரசகரும மொழியானதையும் ஆங்கில மொழி இணைப்பு மொழியானதையும் கவனத்திற் கொள்ளுமிடத்து இரண்டாம் மூன்றாம் மொழிகளில் பெற்றுக் கொள்கின்ற தேர்ச்சியினால் அரசாங்க சேவையை மிகவும் விளைவுத் திறன் மிக்கதாக்குவதாக வேண்டி ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றை வழங்குவது அவசியம் என்ற நிலைப்பாட்டில் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

02:1 மொழித் தேர்ச்சிக்கான ஊக்குவிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்ட 1989.07.31 ஆந் திகதிய 38/89 ஆம் இலக்க 1990.03.12 ஆந் திகதிய 38/89 (1) ஆம் இலக்க 1991.04.24 ஆந் திகதிய 38/89 (11) ஆம் இலக்க 1995.10.09 ஆந் திகதிய 38/89 (111) ஆந் திகதிய சுற்றறிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுவதுடன் 1998.03.11 ஆந் திகதி முதல் இது அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

02:2 மேலேயுள்ள 2:1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்க தற்போது இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவு பெறுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் இந்தச் சுற்றறிக்கைகளுக்கிணங்க மென்மேலும் தகுதி பெறுவராயின் மட்டுமே இவ் உத்தியோகத்தருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு கொடுக்கப்படல் வேண்டும்.

02:3 முன்பு வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் மதியுரைகள் சரியான முறையில் பின்பற்றப்படாமையின் காரணமாகவோ அல்லது பிழையாக அர்த்தம் கொண்டதன் காரணமாக எவரேனும் ஓர் உத்தியோகத்தர் தற்போது இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறுவராயின் இந்தச் சுற்றறிக்கையின் மதியுரைகளை அடியாகக்

கொண்டு அவ்வாறான சந்தர்ப்பங்களை சரிக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

02:4 இந்தச் சுற்றறிக்கையின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கான முதலாவது மொழி எனப்படுவது உத்தியோகத்தர் தனது தற்போதைய பதவிக்கு/ சேவைக்கு நியமிக்கப்பட்ட மொழியாகும்.

உதாரணம்: உத்தியோகத்தர் சிங்கள மொழிமூலம் கல்வி கற்றிருந்தாலும் கூட அவர் ஆங்கில மொழி மூலம் அரச சேவைக்கு உட்சேர்க்கப்படும் பரீட்சைக்குத் தோற்றி சேவைக்கு உட்சேர்க்கப்பட்டிருந்தால் அவரது முதல் மொழியாக ஆங்கில மொழி கொள்ளப்படுவதுடன் சிங்களம் /தமிழ் ஆகியன முறையே இரண்டாம் மூன்றாம் மொழிகளாகக் கொள்ளப்படும்.

02:5 ஆட்சேர்ப்பு முறை அல்லது சேவை பிரமாணக் குறிப்பிற்கிணங்க பதவிக்கு/ சேவைக்கு நியமிப்பதற்காக ஏற்புடையதான மொழிமூலம் தெளிவுபடாத ஒரு சந்தர்ப்பத்தில் இந்தப் படியை வழங்குவதற்காக உத்தியோகத்தர் இரண்டாம் தர அல்லது மூன்றாம் தர/உயர் கல்வி பெற்ற அல்லது மூன்றாம்தர உயர் கல்வி பெற்ற அல்லது தொழிற்றகைமை பெற்ற மொழியே அவரது முதலாவது மொழியாகக் கொள்ளப்பட வேண்டும்.

02:6 இரண்டாம் மொழியிலும் மூன்றாம் மொழியிலும் பெற்றுள்ள தேர்ச்சிக்காக பெற்றுக் கொள்ள முடியுமான இக் கொடுப்பனவு ஆட்சேர்ப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட அடிப்படைத் தகைமைகளுக்கு இணங்க இரண்டு வகைப்படும்.

1. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) சான்றிதழ் அல்லது அதற்குக் கீழான ஒரு சான்றிதழை அரசாங்க சேவைக்கு உட்சேர்க்கப்படுவதற்கு வேண்டப்பட்ட அடிப்படைக் கல்வித் தகைமையாக இருந்த சேவையொன்றின் உத்தியோத்தருக்கு வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புக் கொடுப்பனவு.

11. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ/த) சான்றிதழை அல்லது அதற்கு மேலான ஒரு சான்றிதழை அரசாங்க சேவைக்கு உட்சேர்க்கப்படுவதற்கு வேண்டப்பட்ட அடிப்படைக் கல்வித் தகைமையாக இருந்த சேவையொன்றின் உத்தியோதருக்கு வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புக் கொடுப்பனவு.

## 03. <u>கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமைகள்:-</u>

03:1 க.பொ.த (சா/த) சான்றிதழ் அல்லது அதற்குக் கீழான சான்றிதழ் ஒன்று அரசாங்க சேவைக்கு உட்சேர்க்கப்படுவதற்கு வேண்டப்பட்ட அடிப்படைக் கல்வித் தகைமையாக இருந்த சேவையொன்றின் உத்தியோகத்தருக்கு கீழே

குறிப்பிடப்பட்டுள்ள 3.1.1 (அ)வுடன் 3:1:1 (ஆ) ஆகிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே கொடுப்பனவு செலுத்தப்பட முடியும்.

03:1:1 (அ) 1. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்படுகின்ற

(I) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை அல்லது
(II) தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது
(III) க.பொ.த (சா.த) பரீட்சை அல்லது
(IV) லண்டன் (சா.த) பரீட்சைகளில் சம்பந்தப்பட்ட மொழியைப் பாடமாகக் கொண்டு திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது .

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது உயர் கல்விச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் உயர் கல்வி நிறுவகமாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவகமொன்றினால் நடாத்தப்படுகின்ற மொழி பற்றிய தொழில்சார் சான்றிதழ் ஒன்று அல்லது.

3. தாபனப் பணிப்பாளருக்கு அங்கீகரிக்கப்படுகின்ற வேறேதும் ஒரு சான்றிதழ்.

03:1:1 (ஆ) தாபனப் பணிப்பாளர் பதிலாக பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற வாய்மொழிமூலப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

03:1:1 (அ)(1) விருப்புக்குரிய சிங்களம்/ தமிழ்/ ஆங்கில பாடத்தின் சித்திக்கு இக் கொடுப்பனவுகள் கொடுக்கப்படலாகாது.

03:1:1 (இ) பின்வரும் சந்தர்ப்பங்களில் வாய்மொழிமூலப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவையில் இருந்து விலக்களிக்கலாம்.

I. ஊக்குவிப்புக் கொடுப்பனவை வேண்டி நிற்கின்ற இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் க.பொ.த (உ/த) பரீட்சைச் சித்தி அல்லது அதற்கு மேலான ஒரு பரீட்சைச் சித்தி பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்படுமிடத்தோ அல்லது அதனை சமப்படுத்துகின்ற வேறோர் பரீட்சைக்கோ அல்லது விசேட பரீட்சை ஒன்றுக்கோ தோற்றி சித்தி அடைந்திருந்தால் அல்லது

II. ஊக்குவிப்புக் கொடுப்பனவை வேண்டி நிற்கின்ற இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தி அடைந்துள்ள சந்தர்ப்பத்தில் அந்த மொழி மூலத்திலேயே க.பொ.த (சா/த) பரீட்சையின் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துப் பாடங்களிலும் சித்தி அடைந்திருந்தால் அல்லது.

III. ஊக்குவிப்புக் கொடுப்பனவை வேண்டி நிற்கின்ற இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் பெற்றுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைச் சித்தியும் அதே

சந்தர்ப்பத்தில் அம் மொழி அவரது தாய் மொழியாகவும் இருக்கும்பட்சத்தில் அல்லது

iv. மேலே 3:1:1 இன் கீழ் நடாத்தப்படுகின்ற எழுத்து மூலப் பரீட்சையின் ஒரு பகுதியாக வாய்மொழிமூலப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அப்பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் அல்லது

v. மேலேயுள்ள 3:1:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துப் பரீட்சையொன்றில் சித்தியடைந்துள்ள சந்தர்ப்பமொன்றில் இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் எழுத்திலும் பேச்சிலும் தனது கருத்துக்களை வெளியிடக் கூடிய அளவில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்ற திணைக்களத் தலைவரின் விதந்துரைப்பின் பேரில் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் தாபனப் பணிப்பாளரின் ஒத்திசைவைப் பெற்றிருந்தால் அல்லது.

3:1:2 மேலே 3:1:1 இன் கீழ் தகைமை பெறுவதாயின் ஒரு மொழிக்கு ஆகக் கூடியது ரூபா 150/- வீதம் இரண்டு மொழிக்கும் மாதமொன்றுக்கு ரூபா 300/- ஓய்வூதியமற்ற மாதாந்த கொடுபனவாகச் செலுத்தப்படும்.

03:1:3 மேலே 3:1:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையொன்றில் இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் திறமைச் சித்தி சகிதம் தேர்ச்சி பெற்றிருக்கும் ஓர் உத்தியோகத்தருக்கு 3:1:2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு போன்று இரண்டு மடங்கிற்குச் சமனான ஓய்வூதியமற்ற மாதாந்தக் கொடுப்பனவும் ஒருமுறை மாத்திரம் செலுத்தப்படக்கூடிய ரூபா 500/- சன்மானத் தொகையும்.

03:1:4 மேலே 3:1:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையொன்றில் இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் விசேட சித்தி சகிதம் தேர்ச்சி பெற்றிருக்கும் ஓர் உத்தியோகத்தருக்கு 3:1:2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு போன்று இருமடங்கிற்குச் சமமான ஓய்வூதியமற்ற மாதாந்தக் கொடுப்பனவும் ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படக் கூடிய ரூபா 1000/- சன்மானத் தொகையும் செலுத்த முடியும்.

03:1:5 ஆரம்பக் கட்டத்தில் சாதாரண சித்தியொன்றினைப் பெற்று ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் பின்னர் திறமைச் சித்தியோ அல்லது விசேட சித்தியோ பெற்றால் அதற்கிணங்க 3:1:3 அல்லது 3:1:4 இன் கீழ் உரிமை பெறுகின்ற பயன்களை அப்பரீட்சையில் சித்தியடைந்த தினத்தில் இருந்து பெறுவதற்கு உரித்துடையவராவதுடன் ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படுகின்ற சன்மானத் தொகையினைச் செலுத்தும் போது பின்னர் உரிமை பெற்ற சன்மானத் தொகைக்கும் இடையிலான வித்தியாசத் தொகை மாத்திரமே செலுத்தப்பட வேண்டும்.

03:1:6 தட்டெழுத்தாளர்கள் மற்றும் சுருக்கெழுத்தாளர்களுக்கு கொடுப்பனவு செலுத்தப்படும் போது அவர்கள் தாம் ஊக்குவிப்புக் கொடுப்பனவை வேண்டுகின்ற மொழி மூலத்தில் 3:1:1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையொன்றின் தட்டச்சு அல்லது சுருக்கெழுத்து பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

03:2. க.பொ.த (உ/த) சான்றிதழ் அல்லது அதற்கு மேலான சான்றிதழ் ஒன்று அரசாங்க சேவைக்கு உட்சேர்க்கப்படுவதற்கு வேண்டப்பட்ட அடிப்படைக் கல்வித் தகைமையாக இருந்த சேவை ஒன்றின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற கொடுப்பனவு.

03.2.1 1 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்படுகின்ற

I. உயர் பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை அல்லது
II. பல்கலைகழக நுழைவுப் பரீட்சை அல்லது
III. க.பொ.த (உ.த) பரீட்சை அல்லது
IV. லண்டன் பல்கலைகழக க.பொ.த. (உ.த)பரீட்சை அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றினால் அல்லது உயர் கல்விச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஓர் உயர் கல்வி நிறுவகமாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவகமொன்றினால் நடாத்தப்பட்ட மொழிபற்றிய டிப்ளோமா பட்டம் இருப்பின் அல்லது:

3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது உயர் கல்வி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஓர் உயர்கல்வி நிறுவகமாக பதிவு செய்யப்பட்டுள்ள உயர்கல்வி நிறுவகமொன்றினால் நடாத்தப்பட்ட சாதாரண பட்டப்பரீட்சை ஒன்றில் அல்லது விசேட பட்டப் பரீட்சையொன்றில் அல்லது பட்டப்பின் படிப்பு டிப்ளோமாப் பரீட்சையொன்றில் அல்லது பட்டப்பின்படிப்புப் பரீட்சையில் ஊக்குவிப்புப்படி கோரும் இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் சித்தியடைந்திருத்தல் அல்லது,

4. ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றை வேண்டி நிற்கின்ற இரண்டாம் அல்லது மூன்றாம் மொழிமூலத்தில் பட்டமொன்று அல்லது பட்டப்பின்படிப்பு டிப்ளோமா ஒன்று அல்லது பட்டப்பின்படிப்புப் பாடநெறியொன்றை திருப்தியாக சம்பூரணப்படுத்தியிருந்தால் அல்லது

5. தாபனப் பணிப்பாளரினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற வேறேதும் அதனையொத்த சான்றிதழைப் பெற்றிருந்தால் இந்தக் கொடுப்பனவு செலுத்தப்படமுடியும்.

03:2:2 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ/த) மட்டத்தில் இரண்டாம் மொழியில் அல்லது மூன்றாம் மொழியில் அல்லது அவை இரண்டிலும் தேர்ச்சி பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஒரு மொழிக்கு ஆகக் கூடியது ரூபா 150/- வீதம் இரண்டு மொழிக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபா 300/- ஐ ஓய்வூதியமற்ற மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்தலாம்.

03:2:3 மேலே 3:2:1 இல் குறிப்பிடப்பட்ட பரீட்சையொன்றில் இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் திறமைச் சித்தி சகிதம் தேர்ச்சி பெற்றிருந்தால் 3:2:2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு போன்று இரண்டு மடங்கிற்குச் சமனான

ஓய்வூதியமற்ற மாதாந்தக் கொடுப்பனவும் ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படக் கூடிய ரூபா 1500/- சன்மானத் தொகையும்.

03:2:4 மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையொன்றில் இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் விசேட சித்தி சகிதம் தேர்ச்சி பெற்றிருந்தால் 3:2:2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு போன்று மும்மடங்கிற்குச் சமனான ஓய்வூதியமற்ற மாதாந்தக் கொடுப்பனவும் ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படக்கூடிய ரூபா 2000/- சன்மானத் தொகையும்.

03:2:5 ஊக்குவிப்புக் கொடுப்பனவை வேண்டி நிற்கின்ற இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியை பொதுக் கலைமாணி அல்லது அதற்கும் மேலான ஒரு பரீட்சையில் ஒரு பாடமாக சித்தியடைந்து மொழித் தேர்ச்சியை உறுதிப்படுத்துவாராகில் அவருக்கு 3:2:2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு போன்ற இரண்டு மடங்கிற்குச் சமனான ஓய்வூதியமற்ற மாதாந்த கொடுப்னவும் ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படக் கூடிய ரூபா 5000/- சன்மானத் தொகையும் செலுத்தமுடியும்.

03:2:6 ஆரம்பத்தில் சாதாரண சித்தியொன்றினைப் பெற்று ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் பின்னர் திறமைச் சித்தியோ அல்லது விசேட சித்தியோ அல்லது பொதுக் கலைமாணி அல்லது அதற்கு மேலான சித்தியையோ பெற்றால் அதற்கிணங்க மேலே 3.2.3 3.2.4 3.2.5 இன் கீழ் உரிமை பெறுகின்ற பயன்களை அப்பரீட்சையில் சித்தியடைந்த தினத்தில் இருந்து பெறுவதற்க உரித்துடையவராவதுடன் ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படுகின்ற சன்மானத் தொகையினைச் செலுத்தும் போது பின்னர் உரிமை பெற்ற சன்மானத் தொகைக்கும் முன்னர் செலுத்தப்பட்ட சன்மானத் தொகைக்கும் இடையிலான வித்தியாசத் தொகை மாத்திரமே செலுத்தப்பட வேண்டும்.

04. <u>ஏனைய நிபந்தனைகள்:-</u>

04:1 ஆட்சேர்ப்பு முறைக்கு அல்லது சேவை பிரமாணக் குறிப்பிற்கிணங்க எவரேனும் ஓர் உத்தியோகத்தர் சேவையில் இணையும் போது அல்லது சேவையில் இணைத்ததன் பின்னர் ஏதேனும் ஒரு மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என விதிக்கபட்டிருக்கும் பட்சத்தில் (உதாரணமாக: பதவி நிலை உத்தியோகத்தர்கள் மொழிபெயர்ப்பாளர்கள்) அக் கட்டளையை நிறைவேற்றுவதாக வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்ற தேர்ச்சிச் சான்றிதழானது இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற்று கொள்வதில் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

<u>குறிப்பு</u>: அவ்வாறிருப்பினும்.

(அ) மொழிபெயர்ப்பாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் தாம் கடமைபுரிய கடமைப்பட்டுள்ள இரு மொழிகளையும் தவிர வேறு ஏதேனுமொரு மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தால் அம்மொழிக்காகவும்.

(ஆ) தேசிய மொழிகளின் தேர்ச்சியின் தேவைப்பாட்டில் இருந்து அல்லது இரண்டாம் மொழியின் தேவைப்பாட்டில் இருந்து விலக்களிப்பதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற சான்றிதழானது கோரப்பட்டுள்ள மொழித் தேர்ச்சி மட்டத்தின் பரீட்சையைவிடவும் மேலானதோர் மட்டத்தில் இருக்கின்ற ஒரு பரீட்சையில் தகுதி பெற்றிருக்கின்ற சந்தர்ப்பமொன்றில் அந்த மேலான மட்டத்திற்காகவும் இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்கலாம்.

**உதாரணமாக:**—தேர்ச்சியை நிரூபிப்பதற்காக வேண்டி க.பொ.த (சா/த)பரீட்சையில் ஆங்கில மொழிக்கு சாதாரண சித்தியொன்று தேவைப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் ஓர் உத்தியோகத்தர் க.பொ.த (உ/த)பரீட்சையில் ஆங்கில மொழி சித்தியடைந்துள்ளபடிக்கு சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்கும் பட்சத்தில் தேசிய மொழித் தேர்ச்சியின் தேவைப் பாட்டில் இருந்து அல்லது இரண்டாம் மொழியின் தேவைப்பாட்டில் இருந்து அவருக்க விலக்களிக்கப்படுகின்ற அதே நேரம் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆங்கில மொழி சித்தியடைந்துள்ளதனால் அதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற அவ் உத்தியோகத்தருக்கு எதுவித தடையுமில்லை எனினும் க.பொ.த.(சா/த) ஆங்கிலத்தில் சாதாரண சித்தி வேண்டப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அம் மொழியில் திறமைச் சித்தியோ அல்லது விசேட சித்தியோ பெற்றிருந்தாலும் கூட அந்தச் சான்றிதழுக்கான திறமைச்சித்தியின் அல்லது விசேட சித்தியின் தேர்ச்சிக்காக மாத்திரம் ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெற அவர் தகுதிபெற மாட்டார்.

04.2 ஆட்சேர்ப்பு முறையின் பிரகாரம் அல்லது ஆட்சேர்ப்புக்காக பிரசுரிக்கப்பட்டிருந்த அறிவித்தலில் மேலதிக மொழி ஒன்றின் தேவைப்பாடு ஒரு விசேட தகுதியாக கணிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அம் மொழியை இரண்டாவது அல்லது மூன்றாவது மொழியாகக் கணித்து இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படலாகாது.

04.3 சேவையில் நிரந்தரமாக்கப்படாத உத்தியோகத்தர்கள் இக் கொடுப்பனவைப் பெற தகுதி பெற மாட்டார்கள்.

04.4 1957.05.23 ஆந் திகதிய 379 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் கீழ் ரூபா 500/-இன் கொடுப்பனவைப் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரும் தேவையான தகுதிகளைப் பூரணப்படுத்தியிருப்பின் சிங்கள மொழிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறுவதுடன் மேற்போந்த சுற்றறிக்கையின்படி பெற்றுக் கொண்டுள்ள ரூ.500/- இன் சன்மானத் தொகையை இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிமைபெற்றுள்ள சன்மானத் தொகையில் இருந்து ஒரே முறையில் குறைத்துவிடல் வேண்டும்.

04.5 1988.02.11 ஆந் திகதிய 5/88 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் கீழ் செலுத்தப்பட்ட ரூபா 500/- இன் கொடுப்பனவு இந்தச் சுற்றறிக்கையின் கீழ் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவில் இருந்து ஒரே முறையில் குறைக்கப்பட வேண்டும்.

04.6 மொழித் தேர்ச்சிக்கான ஊக்குவிப்பு முறையை அறிமுகப்படுத்தப்பட்ட 1989.07.03 ஆந் திகதிய 38/89 ஆம் இலக்க 1990.03.12 ஆந் திகதிய 38/89(1) 1991.04.24 ஆந் திகதிய 38/89(11) ஆம் இலக்க 1995.10.09 ஆந் திகதிய 38/89 (111) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் கீழ் உத்தியோகத்தர்களுக்கு ஒரு முறை மாத்திரம் செலுத்தப்பட்ட சன்மானத் தொகை. இந்தச் சுற்றறிக்கையின் கீழ் செலுத்தப்படுகின்ற சன்மானத் தொகையில் இருந்து ஒரே முறையில் குறைக்கப்பட வேண்டும்.

04.7 ஏதேனும் மட்டுப்படுத்தப்பட்ட தேர்ச்சிப் பரீட்சை மூலம் சேவை ஒன்றுக்கு உட்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கான குறிப்பிட்ட மொழித்தேர்ச்சி மட்டமாக திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றினால் சேவைக்கு உட்படுகின்ற உத்தியோகத் தருக்கான தேர்ச்சி மட்டமே கொள்ளப்படுகின்றது.

04.8 ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்குத் தேவைப்படுகின்ற போது தாம் தேர்ச்சி பெற்றுள்ள இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியில் அல்லது அவ்விரண்டு மொழியிலும் தமது சேவையை மேலதிகக் கொடுப்பனவின்றி அரசுக்கு வழங்குவதற்குக் கடமைப்பட்டுள்ளார்கள். அவ்வாறு தமது சேவையை வழங்கத் தவறும் உத்தியோகத்தர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவை நிறுத்தி விடுவதற்கு திணைக்களத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

## 05. <u>வேறு விடயங்கள்:</u>

05.1 இந்த முறையின் கீழ் கொடுக்கப்படுகின்ற ஓய்வூதியமற்ற விசேட கொடுப்பனவு பெயர்வழக்கு கோப்பு, லேஜர் மற்றும் சம்பளத்தாழ்கள் போன்றவை அரசகடமை குறிப்பேடுகளில் வெவ்வேறாகக் காட்டப்படல் வேண்டும்.

05.2 இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக ஏதேனும் கொடுபனவுகள் வழங்கப்பட்டிருப்பின் அதனை மீள அறவிட்டு கொள்ளல் வேண்டும்.

05.3 இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவு செலுத்தப்படும் போது அல்லது செலுத்தப்படாத போது கருத்தொன்று வெளியிடப்பட்டால் அது பற்றி தாபனப் பணிப்பாளரிடம் கருத்துத் தெரிவிப்பது அவரின் ஒத்திசைவுடன் தீர்மானம் ஒன்றுக்கு வருதல் வேண்டும்.

ஒப்பம்/ டிக்ஸன் நிலவீர
பதிற் கடமை புரியும் செயலாளர்
அரசாங்க, நிருவாக,உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

iv/1/mate